# சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி – 627 011

(தேசியத் தர மதிப்பீட்டுக் கல்விக்குழுவின் மறுமதிப்பீட்டில் 3.40/4.00 மதிப்பெண்ணோடு 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது; சர்வதேசத் தரச் சான்றிதழ் ISO : 9001:2008 பெற்றது.)



பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் தன்னாட்சி நிதியில் தமிழ்த்துறை நடத்தும்

## தமிழ் இலக்கியத்தில் தன்னம்பிக்கைச் சிந்தனைகள்

தேசியக் கருத்தரங்க ஆய்வுக்கோவை

# தன்னம்பிக்கைத்தமிழ்

தமிழ்த்துறை வெளியீடு

27.09.2016

Scanned by CamScanner

# பாரதியார் கவிதைகளில் தன்னம்பிக்கைச் சிந்தனைகள்

ஜோ.சகாயபவுலின்
உதவிப் பேராசிரியர்,
பாத்திமாக் கல்லூரி,
மதுரை -18

முன்னுரை:

வாழ்வில் உயிர்த்துடிப்பின் ஆணிவேரே தன்னம்பிக்கை. தன்னம்பிக்கை உள்ள மனிதன் வாழ்க்கையின் கடைசி நிமிடம் வரை போராடுகிறான். நிறைவோடு வாழ்கிறான். நமது பலவீனமான மனித சக்திக்குப் பன்மடங்கு உரம் அளித்து நம் கைகளை உறுதிபடுத்துவது தன் நம்பிக்கை தான். நம்பிக்கை ஏற்படும் போது மனிதன் தன் லட்சியங்களுக்கேற்ப சாதனைபுரிகிறான். தலைவனின் லட்சியம் நாட்டின் வளமான வாழ்வு என்றால், நாடு வளம் பெறுகிறது, மக்கள் வாழ்க்கை நிலை உயருகின்றது. சரித்திரத்தலைவனான பாரதியின் தன்னம்பிக்கை கனவு தான் இன்று நனவாகி சாதனை படைக்க உதவுகிறது. இத்தகைய புரட்சிக் கவிஞன் பாரதியின் தன்னம்பிக்கை சிந்தனைகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

படைப்பின் பாடுபொருள்

படைப்பாளிகளுக்குப் படைப்பின் பாடுபொருள், அச்சமூகத்திலிருந்தே கிடைக்கின்றது. அடிமைக் கட்டுக்குள் கட்டுண்டு கிடந்த மக்களின், விடுதலை உணர்வை, தூண்டச் செய்ததே அவரது தன்னம்பிக்கைக் கவிதைகள் தான். அக்கால கட்டத்தில் மண் விடுதலை, பெண் விடுதலை என்ற இரண்டுமே இமாலயச் சிக்கலாய் வேரூன்றிக் கிடந்தது. மேலும் சாதி,மதம், மொழி என்ற பிற சிக்கல்களும் தலை விரித்து ஆடின. இத்தகு சிக்கல்களைப் பாரதி தன்னம்பிக்கைச் சிந்தனைக் கவிதைகளாக வெளிக்கொணர்ந்தார்.

இந்திய விடுதலை:

வியாபாரம் செய்ய வந்த வெள்ளையர்களுக்கு இந்தியாவின் மூலப்பொருட்கள் பலனளித்தாலும், இந்தியர்களின் அடிமைத்தன உணர்வு அதிகரித்து கிடந்தாலும், இந்திய நாட்டைத் தன் வசப்படுத்த வேண்டும் என்ற தீய குணம் செறிந்து போயிற்று, அதனால் நாளடைவில் அவர்களின் ஆதிக்கம் அகல இயலாத அளவுக்கு அதிகரித்துவிட்டது. ஆகவே இத்தகு வாழ்வை விரும்பாத தன்னலமில்லாத, தன்னம்பிக்கை சிந்தனை உடைய சான்றோர்கள் மிதவாதம், தீவிரவாதம் என்னும் இரண்டு ஆயுதங்களைக் கையிலேந்திப் போரிடத்துவங்கினர்.

Scanned by CamScanner